**இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம் - 2017**

---

இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் 2017 டிசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான விரிவான வருமானக் கூற்று, உரிமை மூலதன மாற்றக் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கிய கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கமளிக்கும் தகவல்களினதும் பொழிப்பினை உள்ளடக்கிய 2017 டிசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13(1) ஆம் பிரிவு மற்றும் 1966 ஆம் ஆண்டின் 37 ஆம் இலக்க இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தான அதிகாரச்சட்டத்தின் 27 ஆம் பிரிவு என்பவற்றுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க, எனது பணிப்பின் கீழ், கணக்காய்வு செய்யப்பட்டன. நிதி அதிகாரச்சட்டத்தின் 14(2)(சீ) பிரிவின் பிரகாரம் கூட்டுத்தாபனத்தின் ஆண்டறிக்கையுடன் பிரசுரிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புரைகளும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

**1.2 நிதிக்கூற்றுக்களுக்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு**

---

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

**1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு**

---

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந்நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். அதியுயர் கணக்காய்வு நிறுவனங்களின் சர்வதேச நியமங்களுக்கு ஒத்ததாக (ஐஎஸ்எஸ்ஏஐ 1000 - 1810) இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்கநெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிடப்பட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளன. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் கூட்டுத்தாபனத்தின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி கூட்டுத்தாபனத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல. முகாமைத்துவம் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவம் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தினது 13 ஆம் பிரிவின் (3) மற்றும் (4) ஆம் உபபிரிவுகள் கணக்காய்வின் நோக்கெல்லையையும் அளவையும் நிர்ணயிப்பதற்கான தற்றுணிபு அதிகாரத்தினை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு வழங்குகின்றன.

எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.4 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

## 2. நிதிக்கூற்றுக்கள்

### 2.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தைத் தவிர, இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் 2017 டிசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவுற்ற ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 2.2.1 இலங்கை கணக்கீட்டு நியமம்

பின்வரும் இணங்காமை கணக்காய்வின்போது அவதானிக்கப்பட்டன.

**(அ) இலங்கை கணக்கீட்டு நியமம் 01**

நியமத்தின் 15 ஆம் பந்தியின் பிரகாரம், நிதி நிலைமைக் கூற்றில் அரசாங்க மானியமானது, உரித்துக்களின் கீழ் வேறானதொரு விடயமாக இனங்காணப்பட வேண்டுமாயினும், ஜேர்மன் அரசாங்க மானியமாகிய ரூபா 1,128,190,137, யப்பான் மானியமாகிய ரூபா 70,849,537, அரச மானியமாகிய ரூபா 863,445,527 என்பன நடைமுறை அல்லாத பொறுப்புகளின் கீழ் காட்டப்பட்டிருந்தன.

**(ஆ) இலங்கை கணக்கீட்டு நியமம் 19**

(i) சேவையின் பின்னரான நலன்களுக்குரிய பொறுப்பை மதிப்பீடு செய்வதற்கு முன்கூட்டிய கூறுச் செலவின அடிப்படை பயன்படுத்தப்படுவதாகக் குறிப்பிடப்பட்டபோதும், நியமத்தின் 75 ஆம் பந்தியின் பிரகாரம் பயன்படுத்தப்பட்ட ஆயுட்கால வரலாற்று அடிப்படை வெளிப்படுத்தப்பட்டிராததுடன், ஆண்டிற்குரிய ஆயுட்கால இலாபம் அல்லது நட்டம் இனங்காணப்படவில்லை.

(ii) நியமத்தின் 83 ஆம் பந்தியின் பிரகாரம், சேவையின் பின்னரான நலனுக்குரிய தரகுக்கு திறைசேரிப் பிணைமுறி அடிப்படையில் தீர்மானம் மேற்கொள்ளப்பட வேண்டுமாயினும், எதுவித அடிப்படையுமின்றி 11 சதவீத தரகு விகிதத்தை கூட்டுத்தாபனம் பயன்படுத்தியிருந்தது.

**(இ) இலங்கை கணக்கீட்டு நியமம் 21**

---

(i) நியமத்தின் 23(அ) பந்தியின் பிரகாரம், 2007 ஆம் ஆண்டு தொடக்கம் மீளாய்வாண்டின் டிசெம்பர் 31 வரை கூட்டுத்தாபனத்தின் வெளிநாட்டுக் கடன்பட்டோரின் அளவாகிய 20,035 அமெரிக்க டொலர்கள் மற்றும் இந்திய ரூபா 3,346 என்பன மீளாய்வாண்டினது டிசெம்பர் 31 இல் உள்ளவாறு நிலவிய செலாவணி விகிதத்தில் மாற்றம் செய்யப்பட்டு ரூபா 3,070,427 ஆக அதனை நிதிக்கூற்றுக்களில் காட்டுவதற்குப் பதிலாக, கடன்பட்டோர் உருவாகிய ஆண்டின் இறுதித் தினத்தில் உள்ளவாறான செலாவணி விகிதத்தில் காட்டியமையால், மீளாய்வாண்டில் வெளிநாட்டுக் கடன்பட்டோர் ரூபா 417,416 குறைவாக நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டிருந்தது.

(ii) நியமத்தின் 23(அ) பந்தியின் பிரகாரம், வெளிநாட்டு நாணயத்தில் உள்ள நிதிசார் விடயத்தை அறிக்கையிடும் காலப்பகுதியின் இறுதியில் நிலவும் செலாவணி விகிதத்தின் அடிப்படையில் மாற்றஞ் செய்ய வேண்டுமாயினும், சென்னையில் உள்ள இலங்கை வங்கிக் கிளைக் கணக்கில் உள்ள மீதியாகிய இந்திய ரூபா 676,658 இந்திய ரூபாவுக்கு நிகரான இலங்கை ரூபா 2.3854 ஆகிய 2017 டிசெம்பர் 31 ஆந் திகதி நிலவிய செலாவணி விகிதத்தில் மாற்றஞ் செய்யப்படாமையால் நிதி நிலைமைக் கூற்றில் அம்மீதி ரூபா 3,654 குறைத்துக் காட்டப்பட்டிருந்தது. மேற்படி காரணத்தால் இனங்காணப்படக்கூடிய காலப்பகுதிக்குரிய சாதகமான அந்நியச் செலாவணி வேறுபாடாகிய ரூபா 3,654 பெறுமதியானது இலாபக் கணிப்பீட்டின்போது இனங்காணப்பட்டிருக்கவில்லை.

**2.2.2 கணக்கீட்டுக் கொள்கைகள்**

---

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) இலங்கை கணக்கீட்டு நியமம் 7 இன் 7 ஆம் பந்தி மற்றும் நிறுவனம் இனங்கண்டுகொண்டிருக்கும் கொள்கை என்பவற்றுக்கமைய, முதலீடு கையேற்கப்பட்ட நாளிலிருந்து முதிர்ச்சியடைவதற்குச் செல்லும் காலம் 03 மாதங்கள் குறைவாக உள்ள முதலீடுகள் மாத்திரமே காசு மற்றும் காசுக்கு நிகரானவையாகக் காட்டப்பட வேண்டுமாயினும், 03 மாதங்களுக்கு மேற்பட்ட முதிர்ச்சியடைந்த ரூபா 63,368,597 பெறுமதியான நிலையான வைப்புகள் 2017 டிசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்றில் காசு மற்றும் காசுக்கு நிகரான விடயமாகக் காட்டப்பட்டிருந்தன.

(ஆ) நிறுவனம் இனங்கண்டு கொண்டிருந்த கொள்கையின் பிரகாரம், வங்கி மேலதிகப்பற்று கடனாகக் கருதப்பட்டு நடைமுறைப் பொறுப்பின் கீழ் காட்டப்பட வேண்டுமாயினும், அதற்கு முரணாக மீளாய்வாண்டின் முடிவில் உள்ளவாறான வங்கி மேலதிகப் பற்றாகிய ரூபா 5,699,421 காசு மற்றும் காசுக்கு நிகரானவையாக எதிர்மறைப் பெறுமதியுடன் காட்டப்பட்டமையால் நிதி நிலைமைக் கூற்றில் நடைமுறைச் சொத்து மற்றும் நடைமுறைப் பொறுப்பு என்பன அதேயளவு குறைத்துக் காட்டப்பட்டிருந்தன.

## 2.2.3 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) ஆறு மாதங்களில் முதிர்ச்சியடையும் 04 நிலையான வைப்புகளில் பெற வேண்டிய வட்டி வருமானத்தைக் கணிப்பிடுகையில் அரையாண்டு வட்டி வீதத்தைப் பயன்படுத்துவதற்குப் பதிலாக வருடாந்த வட்டி வீதம் பயன்படுத்தப்பட்டமையால் வட்டி வருமானமும் பெற வேண்டிய வட்டி வருமானமும் ரூபா 344,481 அதி கூடிய மதிப்பீட்டுக்குள்ளாகியிருந்தன.

(ஆ) கூட்டுத்தாபனத்திற்குரிய சீதுவயில் உள்ள காணியின் ஒரு பகுதி 2005 ஆம் ஆண்டில் விற்பனை செய்யப்பட்டபோது பெறப்பட்ட மூலதன இலாபம் ரூபா 19,997,092 ஆகும். இது தேக்கி வைத்த சம்பாத்தியக் கணக்கில் செலவு வைக்கப்படாது மூலதன ஒதுக்கக் கணக்கில் செலவு வைக்கப்பட்டிருந்தது.

(இ) அளவைகளுக்குப் பயன்படுத்தும் ரூபா 425,000 கிரயமுடைய பவர் லொகர் எனப்படும் உபகரணம் 2016 ஆம் ஆண்டில் தொலைந்திருந்தது. எனினும், இயந்திரம் மற்றும் உபகரணக் கணக்கிலிருந்து அதனை நீக்குவதற்கு கணக்காய்வுத் தினமான 2018 செப்டெம்பர் 3 வரை நடவடிக்கை எடுக்கப்படாமையால் மீளாய்வாண்டின் டிசெம்பர் 31 இல் உள்ளவாறான இயந்திரம் மற்றும் உபகரணக் கணக்கில் காணப்பட்ட மீதி அயேளவு அதிகரித்துக் காட்டப்பட்டிருந்தது.

(ஈ) 1979 ஆம் ஆண்டில் குத்தகைக்குப் பெறப்பட்ட கட்டிடத்தின் உரித்துக்காக மார்க்பெட் நிறுவனத்திற்குச் செலுத்தப்பட்ட ரூபா 250,000 கட்டிடக் கணக்கில் வரவு வைக்கப்பட்டிருந்தது. அக்குத்தகை உடன்படிக்கை 2015 யூன் 01 ஆந் திகதி முடிவடைந்து அதன் உரித்து மீண்டும் நுவரெலியா பிரதேச செயலாளரிடம் ஒப்படைக்கப்பட்டபோதும், கட்டிடக் கணக்கிலிருந்து அதன் பெறுமதியையும் அதற்குரிய தேய்மான நிதியேற்பாட்டையும் அகற்றுவதற்கு நடவடிக்கை எடுக்காததால் மீளாய்வாண்டின் டிசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதிக்கூற்றுக்களில் காணப்படும் கட்டிடப் பெறுமதி அதே தொகையால் அதிகரிக்கப்பட்டும் தேய்மான நிதியேற்பாடு ரூபா 250,000 அதிகரிக்கப்பட்டும் காட்டப்பட்டிருந்தன.

(உ) 2017 ஆம் ஆண்டிற்கான தேசத்தைக் கட்டியெழுப்பும் வரியைக் கணிப்பிடும் போது கருத்திற் கொள்ளப்பட்டிருக்க வேண்டிய வரிக்குட்பட்ட மொத்த வருமானம் ரூபா 536,777,714 ஆகும். எவ்வாறாயினும், கூட்டுத்தாபனம் கருத்திற் கொண்ட தொகை ரூபா 524,226,609 மாத்திரமே. இதனால் 2017 ஆம் ஆண்டிற்கான தேசத்தைக் கட்டியெழுப்பும் வரி ரூபா 251,022 குறைத்துக் காட்டப்பட்டிருந்தது.

(ஊ) பெறுமதி சேர் வரிக்குரிய வருமானத்தைக் கணிப்பிடுகையில் ரூபா 5,722,380 பெறுமதியான 04 வாகன விற்பனை வருமானம் கருத்திற் கொள்ளப்படாமையால் 2017 செப்டம்பருக்கான பெறுமதி சேர் வரிக் கொடுப்பனவு ரூபா 858,357 குறைவாகச் செலுத்தப்பட்டிருந்தது. இவ்வாகனங்களை வாடகைக் கொள்வனவு அடிப்படையில் கொள்வனவு செய்கையில் பயன்பாட்டிற்கேற்ப வரி மீளளிப்புச் செய்யப்பட்டிருந்தது.

(எ) அரச வங்கி நடைமுறைக் கணக்கொன்றிற்குத் தயாரிக்கப்பட்ட வங்கிக் கணக்கிணக்கக் கூற்றில் 2017 டிசெம்பர் 31 இல் உள்ளவாறு வங்கியில் வைப்பிலிடப்படாது கையிலிருந்த காசாகிய (Cash in Hand) ரூபா 122,529 கையிலுள்ள காசுக் கணக்கில் வரவு வைக்கப்படாது வங்கியிலிடப்பட்ட காசாக காசேட்டில் பதிவு செய்யப்பட்டு தேறாத வைப்பாக வங்கி கணக்கிணக்கக் கூற்றில் காட்டப்பட்டிருந்தது.

(ஏ) 1959 மே 29 ஆந் திகதி சுவீகரிகரிக்கப்பட்ட இடமொன்றை 2009 ஆம் ஆண்டின் போது விளையாட்டு மைதானம் ஒன்றிற்காக ஹோமகம பிரதேச செயலாளரிடம் ஒப்படைத்து அதன் புத்தகப் பெறுமதியாகிய ரூபா 186,563 மற்றும் அங்குள்ள கட்டிடத்தின் பெறுமதியாகிய ரூபா 247,441 மற்றும் அக்கட்டிடத்திற்குரிய கட்டிடத் தேய்மான நிதியேற்பாடான ரூபா 235,069 என்பன புத்தகங்களிலிருந்து அகற்றப்படுவதற்கான நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

(ஐ) திருகோணமலை மீள் ஒலிபரப்புக் கூட விற்பனை வருமானத்துக்குரிய ரூபா 22,301,224 விற்பனைக் கிரயம் ஏனைய செயற்பாட்டுச் செலவினத்தில் காட்டப்பட்டதால் 2017 ஆம் ஆண்டின் மொத்த இலாபம் அதேயளவு அதிகரித்துக் காட்டப்பட்டிருந்தது.

(ஒ) நெடுங்கால வாடகைக் கொள்வனவு அடிப்படையில் பல்வேறு அரச நிறுவனங்களிலிருந்தும் கூட்டுத்தாபனம் பெற்றிருந்த காணிகளின் பொருட்டு அரசாங்கத்திற்குச் செலுத்த வேண்டிய ரூபா 122,614,833 கணக்கிலிடப்படவில்லை.

### 2.2.4 எதிர்பாராப் பொறுப்புகள்

வழக்காளிகளுக்கு ரூபா 10 மில்லியன், ரூபா 1,783,587, ரூபா 80,311 எனக் கொடுப்பனவை வழங்க வேண்டுமெனும் 3 வழக்குத் தீர்ப்புகளுக்கு எதிராகக் கூட்டுத்தாபனம் உயர் நீதிமன்றம், விண்ணப்ப நீதிமன்றம், மேல் நீதிமன்றம் என்பவற்றிற்கு விண்ணப்பித்துள்ளபோதும் இவ்வழக்குகள் தொடர்பாக கணக்குகளில் நிதியேற்பாடு மேற்கொள்ளப்படவில்லை.

### 2.2.5 கணக்கிணக்கஞ் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மீளாய்வாண்டினது நிதிக்கூற்றுக்களுடன் சமர்ப்பிக்கப்பட்ட ஒலிபரப்புக் காலக் கடன் கொடுத்தோர் பட்டோலையில் காணப்படும் மீதி ரூபா 12,824,165 ஆகும். ஆயினும், கணக்குப் பிரிவு ஒலிபரப்புக் காலக் கடன் கொடுத்தோர் கட்டுப்பாட்டுக் கணக்கு மீதி ரூபா 12,749,748 ஆகும். அதற்கமைய, ஒலிபரப்புக் கால கடன்கொடுத்தோர் கட்டுப்பாட்டுக் கடன் மீதிக்கும் கடன் கொடுத்தோர் பட்டோலை மீதிக்குமிடையே ரூபா 74,417 வேறுபாடு அவதானிக்கப்பட்டது.

(ஆ) மீளாய்வாண்டின்போது நிதிக்கூற்றுக்களுடன் சமர்ப்பிக்கப்பட்ட ஒலிபரப்புக் காலக் கடன்பட்டோர் பட்டோலையில் காணப்படும் மீதி ரூபா 226,557,638 ஆகிய போதும், கணக்குப் பிரிவு ஒலிபரப்புக் காலக் கடன்பட்டோர் கட்டுப்பாட்டுக் கணக்கு மீதி ரூபா 233,214,273 ஆகியமையால் கடன்பட்டோர் கட்டுப்பாட்டுக் கணக்கு மீதி மற்றும் கடன்பட்டோர் பட்டோலை மீதிக் கூட்டுத் தொகைகளுக்கிடையே ரூபா 6,656,635 வேறுபாடு அவதானிக்கப்பட்டது.

### 2.2.6 விளக்கமளிக்கப்படாத வேறுபாடுகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) வெளிநாட்டு வர்த்தக கடன்பட்டோர் மற்றும் பெற வேண்டிய வைப்புகளினது நிதிக் கூற்று மீதியையும் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட பட்டோலையிலுள்ள மீதியையும் கணக்கிணக்கஞ் செய்தபோது ரூபா 35,720,721 க்கான இனங்காணப்படாத மீதியை உள்ளடக்கி இந்தப் பட்டோலை மீதியை நிதிக்கூற்றுக்களது மீதிக்குச் சமமாக்கிச் சமர்ப்பிக்கப்பட்டிருந்தது.

(ஆ) 2016 ஆம் ஆண்டில் இந்திய அரச வங்கிக் கணக்கு சம்பந்தமாக மேற்கொள்ளப்பட்ட கணக்காய்வின்போது, வங்கி உறுதிப்படுத்தலின் பிரகாரம் குறித்த வங்கிக் கணக்கின் மீதி இந்திய ரூபா 179,278 ஆகியபோதும், கூட்டுத்தாபனக் கணக்கின் பிரகாரம் அம்மீதி இந்திய ரூபா 182,176 ஆகவிருந்தது.

### 2.2.7 கணக்காய்விற்கான சான்றின்மை

கணக்குகளில் உள்ள பின்வரும் ஒவ்வொரு சொத்துக்கள், பொறுப்புகள், கொடுப்பனவுகள் என்பன தொடர்பாக அவற்றிற்கு எதிரே சுட்டிக் காட்டப்பட்டுள்ள சான்றுகள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படவில்லை.

| | கணக்கு விடயம் | பெறுமதி | சமர்ப்பிக்கப்படாத சான்று |
|---|---|---|---|
| | | ரூபா | |
| (அ) | காணி | 7,764,234 | நிலையான சொத்துக்கள் பதிவேடு, நேரடிச் சரி, பிழை பார்த்தல் அறிக்கைகள் |
| (ஆ) | கட்டிடங்கள் | 168,923,977 | நேரடிச் சரி, பிழை பார்த்தல் அறிக்கைகள், நிலையான சொத்துப் பதிவேடு, வெளிநாடுகளிலிருந்து நன்கொடையாக கிடைத்த சொத்துக்கள் தொடர்பான கோவைகள் |
| (இ) | தலைமை அலுவலகப் புதியக் கட்டிடம் | 189,338,449 | கட்டிட நிர்மாண வேலைக்குரிய அங்கீகரிக்கப்பட்ட திட்டம், செலவின மதிப்பீடு, செய்த வேலைக்கான சான்றிதழ், இன்வொய்சுகள் |
| (ஈ) | லக்ஹன்ட கிளை வர்த்தகக் கடன் கொடுத்தோர் | 12,807,802 | கோவை விபரம் மற்றும் பெறுமதிக் கணிப்பு எவ்வாறு தயாரிக்கப்பட்டது என்பதைக் காட்டும் பட்டோலைகள் |
| (உ) | கொடுப்பனவுகள் | 33,613,157 | 45 கொடுப்பனவு உறுதிச் சான்றுகள் |
| (ஊ) | இந்திய அரசு வங்கிக் கணக்கு மீதி | 182,176 | மீதிகளது உறுதிப்படுத்தல் |
| | | 412,629,795 | |

### 2.3 பெற வேண்டிய மற்றும் கொடுப்பனவு செய்ய வேண்டிய கணக்குகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மீளாய்வாண்டின் டிசெம்பர் 31 இல் உள்ளவாறான தொலைத் தொடர்பு ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழுவிற்குக் கொடுப்பனவு செய்ய வேண்டிய ரூபா 149,420,035 கூட்டுத் தொகையையுடைய மீதியில் 1981 முதல், அதாவது 36 ஆண்டுகளாக, தீர்வு செய்யப்படாதிருக்கும் மீதிகள் இருந்தன.

(ஆ) மீளாய்வாண்டிகது டிசெம்பர் 31 இல் உள்ளவாறான வெளிநாட்டுக் கடன்பட்டோர் மீதி ரூபா 62,267,095 ஆகும். இதில் உள்ளடங்கிய ரூபா 59,692,746 பத்து ஆண்டுக்கு மேற்பட்ட பழமை வாய்ந்தவையாகும். இவற்றைத் தீர்வு செய்வதற்குப் போதிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவில்லை.

(இ) மீளாய்வாண்டின் டிசெம்பர் 31 இல் உள்ளவாறான ரூபா 82,612,880 கூட்டுத் தொகையையுடைய 136 வர்த்தகக் கடன்பட்டோருக்கு மீதிகளை உறுதி செய்வதற்கான கடிதம் அனுப்பி வைக்கப்பட்டிருந்தபோதும், அதில் ரூபா 1,063,687 பெறுமதியான 7 கடன்பட்டோர் மாத்திரமே பதில் வழங்கியிருந்ததுடன், அக் கடன்பட்டோரும் கூட்டுத்தாபனத்திற்குச் செலுத்த வேண்டிய கடன் மீதி எதுவுமில்லை என உறுதி செய்திருந்தனர்.

## 2.4 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை.

பின்வரும் சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள், முகாமைத்துவத் தீர்மானங்கள் என்பவற்றுடன் இணங்காத சந்தர்ப்பங்கள் கணக்காய்வின்போது அவதானிக்கப்பட்டன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றுடனான தொடர்பு | இணங்காமை |
|---|---|
| (அ) 2013 ஏப்ரல் 30 ஆந் திகதி திருத்தஞ் செய்யப்பட்டவாறான 2009 ஆம் ஆண்டின் 09 ஆம் இலக்க தேசத்தைக் கட்டியெழுப்பும் வரி அதிகாரச்சட்டம் | இந்த அதிகாரச்சட்டத்தின் 4 (i), (ii) பிரிவுகளின் பிரகாரம், தேசத்தைக் கட்டியெழுப்பும் வரியைச் செலுத்துகையில் குறித்தவொரு மாதத்தின் வரி அடுத்து வரும் மாதத்தின் 20 அல்லது அதற்கு முன்னர் உள்நாட்டு இறைவரித் திணைக்களத்திற்கு வழங்கப்பட வேண்டுமாயினும், அதிகாரச்சட்டத்தின் 8(டீ) பிரிவின் பிரகாரம் ஒவ்வொரு காலாண்டிற்குமுரிய வரி தொடர்பான அறிக்கைகள் அடுத்து வரும் காலாண்டின் 20 ஆந் திகதி அல்லது அதற்கு முன்னர் உள்நாட்டு இறைவரித் திணைக்களத்திற்கு அனுப்பி வைக்கப்பட வேண்டும். எனினும், கூட்டுத்தாபனம் தேசத்தைக் கட்டியெழுப்பும் வரியை ஒவ்வொரு மாதத்தின் போதும் 02 மாத தாமதத்தின் பின்னரே கொடுப்பனவு செய்திருந்தது. அவ்வாறே, காலாண்டு அறிக்கைகளும் உள்நாட்டு இறைவரித் திணைக்களத்திற்குக் குறித்த தினத்தில் அனுப்பி வைக்கப்படவில்லை. |
| (ஆ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப் பிரமாணங்கள் | |
| (i) நிதிப்பிரமாணம் 177 | கணக்கில் 2017 டிசெம்பர் 31 இல் உள்ளவாறு இனங்காணப்பட்டிராத மொத்த நேரடி வரவாகிய ரூபா 1,002,063 தீர்வு செய்யப்படுவது 2018 மே 31 வரை நடைபெறவில்லை. அம்மீதியுள் 2016 முதல் முன்கொண்டு வரப்பட்டவாறிருக்கும் ரூபா 49,318 மீதியும் உள்ளடங்கியிருந்தது. |
| (ii) நிதிப்பிரமாணங்கள் 396(ii), (iii) | 2018 மே 31 ஆந் திகதியளவில் செல்லுபடிக் காலம் காலாவதியாகி 06 மாதங்களைக் கடந்தும் கொடுப்பனவுக்காக வங்கிக்குச் சமர்ப்பிக்கப்படாதிருந்த ரூபா 918,136 பெறுமதியான 23 காசோலைகள் சம்பந்தமாகப் பிரமாணங்களின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படவில்லை. |
| (இ) பொருட் கொள்வனவு வழிகாட்டிக் கோவையின் 4.2.1 ஆம் பந்தியின் (அ), (ஆ) பிரிவுகள் | பொருட் கொள்வனவு செய்யும் நிறுவனம் பிரதான பொருட் கொள்வனவுத் திட்டத்தைத் தயாரிக்க வேண்டும். குறைந்தது 3 ஆண்டுகளுக்கான எதிர்பார்க்கப்படும் பொருட் கொள்வனவுகள், பிரதான பொருட் கொள்வனவுத் திட்டத்தில் நிரல்படுத்தப்பட வேண்டும். எவ்வாறாயினும், கூட்டுத்தாபனத்தால் 2017 ஆம் ஆண்டிற்காக மாத்திரமே பொருட் கொள்வனவுத் திட்டம் தயாரிக்கப்பட்டிருந்தது. |

| | | |
|---|---|---|
| (ஈ) | 1978 டிசெம்பர் 19 ஆந் திகதிய 842 ஆம் இலக்கத் திறைசேரிச் சுற்றறிக்கையின் 3 ஆம் பட்டோலை 2.11 ஆம் பந்தி | சுற்றறிக்கைப் பிரகாரம், நிலையான சொத்துப் பதிவேடொன்று தயாரிக்கப்பட்டிராததுடன், அதற்குப் பதிலாக கணனி மூலம் முறையாக சொத்துப் பதிவேடு பேணப்பட்டிருந்தது. அந் நிலையான சொத்துப் பதிவேட்டில் காணிகள், கட்டிடங்கள், வாகனங்கள், மின் உற்பத்தி இயந்திரங்கள் (ஜெனரேட்டர்), டிரான்ஸ் மீட்டர் போன்ற முக்கியமானவை பலவற்றினது விபரம் உள்ளடக்கப்படவில்லை. |
| (உ) | 2002 நவம்பர் 28 ஆந் திகதிய ஐஏஜ/2002/02 ஆம் இலக்க திறைசேரிச் சுற்றறிக்கை | கணனிகள், துணைப் பாகங்கள், மென் அணிகள் சம்பந்தமாக வேறாக ஒரு நிலையான சொத்துப் பதிவேடு பேணப்பட வேண்டுமாயினும், நிலையான சொத்துப் பதிவேடு பேணப்படவில்லை. |
| (ஊ) | 2003 யூன் 02 ஆந் திகதிய பீஈடீ 12 ஆம் இலக்கப் பொது முயற்சிகள் சுற்றறிக்கை | |
| | (i) 7.2 ஆம் பந்தி | 2017 டிசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 27,677,392 பெறுமதியான கையிருப்புடன் உள்ள கூட்டுத்தாபனம் கையிருப்பு அறிக்கைகளைப் பேணுவதற்குப் புத்தகங்களை (Manually) பயன்படுத்தியிருந்தது. குறித்த பிரமாணத்தின்படி, கணனிக் கணக்கீட்டு முறைமை அல்லது குறைந்தது விநியோகப் பத்திர பெக்கேஜ் (Ms-Excel) என்பவற்றைப் பயன்படுத்தி கையிருப்பு அறிக்கைகளைப் பேணாமையால், இறுதிக் கையிருப்பு அறிக்கையைப் பெறுவதில் குறிப்பிடத்தக்களவு காலம் செல்வது அவதானிக்கப்பட்டது. |
| | (ii) 7.4.5 ஆம் பிரிவு | கூட்டுத்தாபனம் வருடாந்தம் குழுக்களை நியமித்து சகல நிலையான சொத்துக்களும் உள்ளதைச் சரி, பிழை பார்க்க வேண்டுமாயினும், மீளாய்வாண்டில் வாகனங்கள் சரி, பிழை பார்க்கப்படவில்லை. |
| (எ) | 2015 மே 25 ஆந் திகதிய பொது முயற்சிகள் சுற்றறிக்கை இலக்கம் பீஈடீ 01/2015 | (i) உத்தியோகபூர்வ வாகனம் அல்லது வாகனத்திற்கான படியைப் பெறுவதற்கு அருகதை உடையவர் 2006 ஆம் ஆண்டினது முகாமைத்துவச் சேவைகள் திணைக்களச் சுற்றறிக்கை எம்எஸ்டீ 03 இலக்கப் பிரகாரம் Hm 1-1 தரம் அல்லது அதற்கு மேற்பட்ட தரத்திலான பதவி வகிக்கும் உத்தியோகத்தராக வேண்டுமாயினும், தற்போது கூட்டுத்தாபனத்தில் அச்சம்பள அளவுத் திட்டத்தில் உள்ளடங்காத பணிப்பாளர்களுக்கு 2017 டிசெம்பர் 01 முதல் மாதாந்தப் போக்குவரத்து படியாக ரூபா 20,000 வழங்கப்பட்டிருந்தது. <br><br> (ii) இப்படி வழங்கப்பட்டவர்களுள் சம்பள அளவுத் திட்டத்தில் உள்ளடக்கப்படுவதற்குத் தகைமை அற்ற மற்றும் போலியான கல்விச் சான்றிதழ்களைச் சமர்ப்பித்து தற்போது பணிப்பாளர் பதவியில் உள்ள பணிப்பாளர் ஒருவர் இருப்பதும் அவதானிக்கப்பட்டது. |

| | |
|---|---|
| (ஏ) 2015 யூலை 10 ஆந் திகதிய 02/2015 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையின் 2 ஆம் பந்தி | பயன்படுத்தப்பட முடியாத நிலையில் உள்ள வாகனங்களை இனங்கண்டு அவற்றைக் கைதவிர்ப்புச் செய்வதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமாயினும், 2 முதல் 10 ஆண்டுகளாகப் பயன்படுத்தப்பட முடியாத நிலையில் உள்ள ரூபா 1,300,000 மீள் பெறுமதியுடைய 2 வாகனங்கள் மற்றும் கிரயத்தை இனங்காண முடியாத வாகனம் ஒன்றும் சுற்றறிக்கைப் பிரகாரம் கைதவிர்ப்புச் செய்யப்படவில்லை. |

## 3. நிதிசார் மீளாய்வு

### 3.1 நிதிப் பெறுபேறுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், மீளாய்வாண்டிற்கான நிதிப் பெறுபேறு ரூபா 71,383,395 இலாபம் ஆகும். இதற்கொப்பான முன்னைய ஆண்டின் இலாபம் ரூபா 55,217,495 ஆகும். முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் மீளாய்வாண்டினது நிதிப் பெறுபேற்றில் ரூபா 16,165,900 அதாவது, 29 சதவீத அதிகரிப்பு தென்படுகின்றது. ஏனைய செயற்பாட்டு வருமானம் 33 சதவீதமான ரூபா 22,801,224 அதிகரிப்புக்குள்ளானமையே நிகர இலாப அதிகரிப்புக்கான பிரதான காரணமாகும்.

மீளாய்வாண்டினதும் முன்னைய 04 ஆண்டுகளினதும் நிதிப் பெறுபேறுகளை பகுப்பாய்வு செய்கையில் 2013, 2014 ஆண்டுகளில் நிகர நட்டம் ஏற்பட்டிருந்ததுடன், 2015, 2016 மற்றும் மீளாய்வாண்டில் நிகர இலாபம் ஏற்பட்டிருந்தது. நிதிப் பெறுபேற்றில் ஊழியர்களுக்கான ஊதியம், அரசாங்கத்திற்குச் செலுத்திய வரி மற்றும் நடைமுறை அல்லாத சொத்துக்களது தேய்மானம் என்பவற்றை மீண்டும் சீராக்கல் செய்யும்போது 2016 ஆம் ஆண்டில் ரூபா 813,039,252 ஆகவிருந்த பங்களிப்பு 2017 ஆம் ஆண்டில் ரூபா 812,076,634 வரை குறைவடைந்திருந்தது.

### 3.2 பகுப்பாய்வு ரீதியான மீளாய்வு

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் மீளாய்வாண்டினது கணக்குகளில் காணப்படும் புள்ளி விபர பெறுமதிகளின் பிரகாரம் நடைமுறை விகிதமும் துரித விகிதமும் முறையே 1.77 மற்றும் 1.71 ஆகியபோதும், நடைமுறைச் சொத்துக்களில் உள்ளடங்கிய கடன்பட்டோரில் 02 முதல் 42 ஆண்டுகள் வரையான பழமை வாய்ந்த உள்ளூர் கடன்பட்டோர் மீதி ரூபா 53,413,844 மற்றும் வெளிநாட்டுக் கடன்பட்டோர் மீதியான ரூபா 61,918,484 என்பன உள்ளடங்கியமையால் கடனை அறவிடும் ஆற்றலும் திரவவியலும் இல்லாதிருப்பது அவதானிக்கப்பட்டது.

(ஆ) முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் மீளாய்வாண்டினது மொத்த இலாப விகிதம் 6.24 சவீதம் முதல் 10.81 சதவீதம் வரை அதிகரித்திருந்ததுடன், திருகோணமலை ஒலிபரப்புக் கூட விற்பனை வருமானத்துடன் தொடர்புடைய விற்பனைக் கிரயம் ஏனைய கிரயங்களின் கீழ் காட்டப்பட்டமையே இதற்கான பிரதான காரணம் என அவதானிக்கப்பட்டது.

(இ) முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் நிகர இலாப விகிதம் 8.3 சதவீதம் முதல் 10.82 சதவீதம் வரை அதிகரித்திருந்ததுடன், முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் ஏனைய நானாவித வருமானம் அதிகரித்திருந்தமை இதற்கான காரணமாகியது.

## 3.3 கூட்டுத்தாபனத்திற்கு எதிராக அல்லது கூட்டுத்தாபனத்தினால் ஆரம்பிக்கப்பட்டுள்ள சட்டபூர்வ நிகழ்வுகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) பீபல்ஸ் டிரஸ்ட் கிரடிட் இன்வெஸ்மென்ட் கம்பனியால் கூட்டுத்தாபனத்தில் ஒலிபரப்பட்ட நிகழ்ச்சிகளுக்காக பெற வேண்டிய ரூபா 150,000 தொகையை அறவிடுவதற்காக அந்நிறுவனத்திற்கு எதிராக கொழும்பு மாவட்ட நீதிமன்றத்தில் வழக்குத் தொடரப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், பிரதிவாதி வசிப்பிடத்திலிருந்து சென்றுள்ளதால் வழக்கைத் தொடரமுடியாது 02 ஆண்டுகளுக்கு மேலாக நீதிமன்றம் வழக்கை ஒத்தி வைத்திருந்தது.

(ஆ) லங்கா சீமெந்து கம்பனியின் கூட்டுத்தாபனத்தினால் ஒலிபரப்புச் செய்யப்பட்ட நிகழ்ச்சிகளுக்காக பெற வேண்டியிருந்த ரூபா 471,715 தொகையை அறவிடுவதற்காக அந்நிறுவனத்திற்கு எதிராக கொழும்பு மாவட்ட நீதிமன்றத்தில் வழக்கு தொடரப்பட்டிருந்த போதிலும், ரீட் கட்டளையொன்று எடுப்பதற்கு பிரதிவாதியின் சொத்துக்களை சமர்ப்பிக்குமாறு நீதிமன்றத்தினால் செய்யப்பட்ட கட்டளையொன்றின் பிரகாரம் கம்பனியின் சொத்துக்கள் தொடர்பான விபரங்களை சமர்ப்பிப்பதற்கு கூட்டுத்தாபனம் செயற்படாமையால் 02 ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலமாக நீதிமன்றத்தால் வழக்கு ஒத்தி வைக்கப்பட்டுள்ளது.

(இ) நிறைவேற்றுதர விற்பனை உத்தியோகத்தர் ஒருவரால் 02 சந்தர்ப்பங்களில் மேற்கொள்ளப்பட்ட மோசடிகள் காரணமாக ரூபா 4,716,813 மற்றும் ரூபா 7,551,750 தொகையினை அறவிடுவதற்காக கொழும்பு மாவட்ட நீதிமன்றத்திலும் கொழும்பு மாகாண நீதிமன்றத்திலும் 02 வழக்குகள் தொடரப்பட்டிருந்த போதிலும் பிரதிவாதி குடியிருந்த இடத்தை விட்டுச் சென்றிருந்தமை காரணமாக வழக்கினை நடாத்திச் செல்ல முடியாமையால் 03 ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலமாக நீதிமன்றத்தால் வழக்கு விசாரணை செய்யப்படாமல் ஒத்தி வைக்கப்பட்டிருந்தது.

(ஈ) கிராந்துறுகோட்டை ஒலிபரப்புக்கூட பெண் ஊழியர் ஒருவருக்கு சேமலாப நிதியம் கொடுப்பனவு செய்யப்படாமைக்கு எதிராக கொழும்பு மஜிஸ்டிரேட் நீதிமன்றத்தில் தொடரப்பட்டிருந்த வழக்குத் தீர்ப்பின்படி பங்களிப்புத் தொகையாக ரூபா 80,311 உடன் தண்டப்பணமாக ரூபா 80,311 கொடுப்பனவு செய்யப்பட வேண்டுமாயினும் அதற்கு எதிராகக் கூட்டுத்தாபனம் கொழும்பு மாகாண நீதிமன்றத்தில் மேன்முறையீடு செய்திருந்ததுடன், இவ்வழக்குத் தொடர்பாக வழக்குக் கட்டணமாக மாத்திரம் மீளாய்வாண்டு இறுதி வரை ரூபா 245,000, அதாவது, கொடுப்பனவு செய்ய வேண்டிய இழப்பீட்டுத் தொகையிலும் மும்மடங்கு அதிகமாகக் கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது.

## 4. செயற்பாட்டு மீளாய்வு

### 4.1 செயலாற்றல்

#### 4.1.1 திட்டமிடல்

(அ) 2014 பெப்ரவரி 17 ஆந் திகதிய 01/2014 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையின் 4(6) ஆம் பிரிவின் பிரகாரம் செயல் நடவடிக்கைத் திட்டத்துடன் சமர்ப்பிக்கப்பட வேண்டிய உள்ளகக் கணக்காய்வுத் திட்டம் சமர்ப்பிக்கப்படவில்லை.

(ஆ) 2003 யூன் 02 ஆந் திகதிய பீஈடீ/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 5.1.2 ஆம் பிரிவின் பிரகாரம், 2017 - 2019 காலப்பகுதிக்கான கூட்டிணைந்த திட்டம் தயாரிக்கப்படவில்லை. 2012 - 2016 ஆம் காலப்பகுதிக்குரிய கூட்டிணைந்த திட்டமே கணக்காய்விற்குச் சமர்பிக்கப்பட்டிருந்தது.

## 4.2 முகாமைத்துவ செயற்பாடுகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 1974 ஆம் ஆண்டு தொடக்கம் கூட்டுத்தாபனம் கொள்வனவு செய்திருந்த சொத்துக்களில் விற்பனை செய்த அல்லது பயன்படுத்தாது அப்புறப்படுத்தப்பட்ட சொத்துக்களது கிரயத்தை இனங்காணக்கூடியவாறான பதிவேடுகள் பேணப்பட்டிருக்காமையால் அச் சொத்துக்களது கிரயம் கணக்கிலிருந்து அகற்றப்படாது, அதன் காரணமாக, மீளாய்வாண்டின் இறுதியில் உள்ளவாறு நிதிக்கூற்றுக்களில் காணப்பட்ட நிலையான சொத்துக்களது மீதியும் நிறுவனத்தில் நேரடியாகக் காணக்கூடியதாகவுள்ள சொத்துக்களுக்குமிடையே வேறுபாடுகள் அவதானிக்கப்பட்டதுடன், இந்நிலைமையைச் சீராக்குவதற்குப் பொறுப்பாக உள்ளவர்கள் இவ்வறிக்கைத் தினம் வரை நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(ஆ) கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட 02 ஆம் இலக்கக் களஞ்சியக் கையிருப்பு பொருட் கணிப்பு அறிக்கையின் பிரகாரம் பயன்படுத்தப்பட முடியாத சில பொருட்களைக் கைதவிர்ப்புச் செய்வதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு அறிவுறுத்தப்பட்டிருந்தபோதும், அவ்வாறு கைதவிர்ப்புச் செய்யப்பட வேண்டிய பொருட்கள் எவை என்பதைக் கையிருப்புக் கணிப்புத் தாள்களில் குறிப்பிட்டிருக்கவில்லை.

(இ) 2017 ஆம் ஆண்டில் கூட்டுத்தாபனம் பெற்ற வங்கி மேலதிகப்பற்றுக்குச் செலுத்தப்பட்ட மேலதிகப்பற்று வட்டி ரூபா 5,419,200 ஆகும். நிலையான வைப்பு மூலம் பெறப்பட்ட வட்டி வருமானம் ரூபா 4,868,900 ஆகும். அதற்கமைய, மேலதிகத் தொகையை நிலையான வைப்பிலிட்டு மேலதிகப் பற்றைப் பெற்றிருந்தமையால் கூட்டுத்தாபனம் இழப்பிற்குள்ளான தொகை ரூபா 550,300 என அவதானிக்கப்பட்டது.

(ஈ) தற்போது கூட்டுத்தாபனத்தின் சேவையிலிருந்து தாமாகவே விலகிச் சென்றுள்ள, கூட்டுத்தாபனத்தில் பணியாற்றிய சந்தர்ப்பத்திலும் வேறு நிறுவனங்களுக்கு அவ்வவ்போது விடுவிக்கப்பட்டிருந்த நபர் ஒருவருக்கு 2004 தொடக்கம் 2009 வரை கொடுப்பனவு செய்திருந்த மீளளிப்புச் செய்யப்பட வேண்டிய ரூபா 144,722 கணக்காய்வுத் தினமான 2018 செப்டெம்பர் 03 ஆந் திகதியளவிலும் மீளளிப்புச் செய்யப்படாதிருந்தது.

(உ) இருபத்தொரு ஆண்டுகளுக்கு முன்னர் ஏற்பட்ட ரூபா 221,965 பண மோசடி மற்றும் 2007 ஆம் ஆண்டில் ஏற்பட்ட அவ்வாறானதொரு ரூபா 281,110 பணமோசடி என்பன காரணமாக நிறுவனத்திற்கு நட்டம் ஏற்பட்டுள்ளமை உறுதியாகியபோதும், மீளாய்வாண்டின் இறுதிவரையிலும் குறித்த இழப்புகள், நட்டங்களைத் தீர்வு காண்பதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஊ) நாணயக் கடிதத்தை திறப்பதற்கென ஆரம்பிக்கப்பட்டதாகக் குறிப்பிடப்பட்ட வங்கிக் கணக்கொன்றில் ஆண்டு முழுவதும் ரூபா 153 மில்லியனுக்கு மேற்பட்ட பணம் இருந்ததுடன், அத்தொகை வங்கிக் கணக்கில் இருந்தமையால் வட்டி வருமானம் எதுவும் கிடைக்கப்பெறவில்லை. அதனை சாதாரண சேமிப்புக் கணக்கில் வைப்புச் செய்திருந்தால் குறைந்தது ரூபா 14,356,565 வட்டி வருமானத்தையாவது கூட்டுத்தாபனம் சம்பாதித்திருக்க ஏதுவாக இருந்திருக்கும்.

(எ) சீனோர் (CEYNOR) நிறுவனம் தொடர்பாக ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம் ஒலிபரப்பிய செய்தி ஒன்றால் சீனோர் (CEYNOR) நிறுவனத்தின் முன்னாள் தலைவர் ஒருவருக்கு மான நஷ்டம் ஏற்பட்டதாகக் கூறி அத்தலைவர் கொழும்பு மாவட்ட நீதிமன்றத்தில் வழக்குத் தொடுத்திருந்ததுடன், அதற்கமைய கூட்டுத்தாபனம் ரூபா 10 மில்லியன் கொடுப்பனவு செய்ய வேண்டுமெனவும் தீர்ப்பளிக்கப்பட்டிருந்தது.

இதற்கமைய, கூட்டுத்தாபனம் தனது நோக்கத்திற்கு உட்படும் விதத்தில் ஒழுக்க நெறியுடன் ஒலிபரப்பின் ஊடாக சம்பிரதாயத்தை ஏற்படுத்தவும் பொறுப்புடன் நடுநிலையான தாவல்களை வழங்குவதற்குமான நோக்கம் சிதறும் வண்ணம் நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளதாகக் கணக்காய்வில் அவதானிக்கப்பட்டது.

## 4.3 செயற்பாட்டு நடவடிக்கைகள்

பொருட் கணிப்பு நடவடிக்கைகளில் ஈடுபட்ட 2017 பெப்ரவரி 17 ஆந் திகதியின்போது 99 கையிருப்புப் பொருட்கள் கணக்காய்வில் பரிசீலிக்கப்பட்டிருந்தன. அவற்றுள் 12 விடயங்களது புத்தக மீதிகளுக்கும் உள்ளவாறான மீதிகளுக்குமிடையே வேறுபாடுகள் நிலவியபோதும், கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட பொருட் கணிப்புச் சபையினது அறிக்கையில் இவ்வேறுபாடுகள் குறிப்பிடப்பட்டிருக்கவில்லை. உள்ளவாறான மீதியும் கையிருப்புச் சபையினது புத்தக மீதியும், சமமாக உள்ளதாகக் காட்டப்பட்டிருந்தது. அவ்வாறே, கையிருப்புக் கணிப்பின்போது கணக்காய்வில் அவதானிக்கப்பட்ட 01 ஆம் இலக்கக் களஞ்சியத்தில் இருந்த பயன்படுத்தப்படாதிருந்த 19 மின்சாரத் துணைப்பாகக் கையிருப்பும் குறித்த வருடாந்தப் பொருட் கணிப்புச் சபையினது அறிக்கையில் குறிப்பிடப்பட்டிருக்கவில்லை.

## 4.4 சர்ச்சைக்குரிய கொடுக்கல் வாங்கல்கள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) கூட்டுத்தாபனத்தின் பணிப்பாளர் நாயகமாகப் பணியாற்றிய உத்தியோகத்தர் 2015 சனவரி 19 முதல் அப்பதவியிலிருந்து விடுவிக்கப்பட்டிருந்தார். எவ்வாறாயினும், ஒலிபரப்புக் கூட்டுத்தாபன அதிகாரச்சட்டத்தின் 19(3)(ஆ) பிரிவின் பிரகாரம் அவ்வுத்தியோகத்தர் முன்னர் தாம் வகித்த பதவியாகிய பிரதிப் பணிப்பாளர் நாயகப் பதவியில் அமர்த்தப்படவில்லை. அதற்குப் பதிலாக அமைச்சரவையின் அங்கீகாரமின்றி பணிப்பாளர் சபையினது அங்கீகாரத்துடன் 2015 ஒக்டோபர் 19 முதல் கூட்டுத்தாபனத்தின் மதியுரையாளர் பதவி ஒன்றில் அமர்த்தப்பட்டபோதும், தாம் அப்பதவியை பொறுப்பேற்க முடியாது என அறிவித்திருந்தார். எனினும், பணிப்பாளர் நாயகத்திற்குரிய உத்தியோகபூர்வ மனை, உத்தியோகபூர்வ வாகனம், எரிபொருள், சம்பளம், ஊழியர் சேமலாப நிதியம், தொலைபேசிக் கட்டணம் என 2015 முதல் மீளாய்வாண்டின் டிசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 3,227,353 கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. அவ்வுத்தியோகத்தர் ஓய்வுபெற்றுச் சென்றதன் பின்னர் அமைச்சரவையின் அங்கீகாரத்துடன் 06 மாதகால சேவை நீடிப்பு வழங்கப்பட்டிருந்தது. குறித்தவொரு பொறுப்பும் ஒப்படைக்கப்படாது ஓய்வு பெறுவதற்கு முன்னர் பெற்ற சம்பளமும் ஏனைய வசதிகளும் அங்கீகரிக்கப்பட்டிருந்தன.

(ஆ) ஸ்பானிய வழங்குனர் நிறுவனம் ஒன்றினது விற்பனை முகாமையாளரது 2017 சனவரி 25 ஆந் திகதிய கடிதத்தின் பிரகாரம் கேட்கும் வசதிகள் அடங்கிய கணனி தொடர்பான தொழிற்சாலைப் பயிற்சிக்கு கூட்டுத்தாபனத்திலிருந்து பங்குபற்றும் 2 உத்தியோகத்தர்களது சகல செலவுகளையும் ஸ்பானிய வழங்குனரே ஏற்றுக் கொள்வதாகக் குறிப்பிடப்பட்டிருந்தபோதும், உள்ளூர் முகவர் நிறுவகத்தினது முகாமைத்துவப் பணிப்பாளரது கடிதத்தை அடிப்படையாகக் கொண்டு 2 உத்தியோகத்தர்களுக்கு ரூபா 341,848 உணவுக்கான செலவினமாக வழங்கப்பட்டிருந்தது.

## 4.5 குறைபாடுகளாகத் தோற்றுபவை

2016 ஆம் ஆண்டின்போது தலைமை அலுவலகத் தொடர்புக் கூடம் $c_1$ - $c_{12}$ நவீனமயப்படுத்தப்படல் செயற்திட்டம் ஆரம்பிக்கப்படும் சந்தர்ப்பத்திலேயே கூடத்திற்குத் தேவைப்படும் 12 கேட்கும் கலவைகள் (Mixer Console) கொள்வனவு செய்யப்படுவதற்குத்

திட்டமிடப்பட்டு அதற்கான நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்தது. அவ்வாறிருக்க, 2016 ஆம் ஆண்டில் 06 Mixer Console மற்றும் மேலும் 06 ஐ 2017 ஆம் ஆண்டிலும் கொள்வனவு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டதன் மூலம் நிறுவனத்திற்கு ரூபா 6,452,319 இழப்பு ஏற்பட்டிருந்தது.

### 4.6 நிதியத்தை குறைவாகப் பயன்படுத்துதல்

2017 ஆம் ஆண்டில் மூலதனச் செலவினமாகப் பெறப்பட்ட அரசாங்க மானியம் ரூபா 214.3 மில்லியன் ஆகும். எவ்வாறாயினும், கொடுப்பனவு உறுதிச் சான்றுகளின் மூலம் மூலதனச் செலவினம் ரூபா 175.6 மில்லியன் மாத்திரமே ஆகியமையால் மூலதனச் செலவினத்திற்கான அரசாங்க மானியத்தில் ஏறக்குறைய 18 சதவீதம் எஞ்சியிருந்தது.

### 4.7 பயன்படுத்தப்படாத / குறைவாகப் பயன்படுத்தப்பட்ட சொத்துக்கள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) இரணவிலவில் அமைந்துள்ள அமெரிக்க குரல் ஒலிபரப்பு நிலையம் பயன்படுத்தி கூட்டுத்தாபனத்திடம் ஒப்படைத்துள்ள செயற்படும் நிலையில் உள்ள சிறிய அலைவரிசை டிரான்ஸ்மீட்டர் இயந்திரம் ஒன்று கணக்காய்வு மேற்கொள்ளப்படும் சந்தர்ப்பமாகிய 2018 செப்டெம்பர் 3 வரை எதுவிதத்திலும் பயன்படுத்தப்படாது, பாதுகாப்பற்றவாறு திருகோணமலை ஒலிபரப்பு வளாகத்தில் களஞ்சியப்படுத்தப்பட்டிருந்தது.

(ஆ) பழுதுபார்த்துப் பயன்படுத்தக் கூடிய மோட்டார் வாகனம் ஒன்று 1 ½ ஆண்டுகள் பூராகவும் பயனற்றவாறு கொழும்பு தலைமை அலுவலக வளாகத்தில் இருந்தது.

### 4.8 சிக்கனமற்ற கொடுக்கல் வாங்கல்கள்

குறித்த தினத்தில் வரியைச் செலுத்தாமையால், உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தின் வரி நிலுவை அறிக்கைகளின் பிரகாரம், கணக்காய்வுத் தினமான 2018 செப்டெம்பர் 17 ஆந் திகதியளவில் பொருளாதாரச் சேவைக் கட்டணம், தேசத்தைக் கட்டியெழுப்பும் வரி, பெறுமதி சேர் வரி நிலுவையாக ரூபா 90,054,857 மற்றும் அவற்றிற்குரிய மொத்தத் தண்டப்பணமாக ரூபா 51,684,603 என்பன உள்நாட்டு இறைவரித் திணைக்களத்திற்குச் செலுத்தப்பட வேண்டியிருந்தது.

### 4.9 இனங்காணப்பட்ட இழப்புகள்

2018 மார்ச் மாதத்தில் ஹப்புத்தளை ஒலிபரப்புக்கூட வளாகத்தில் இருந்த ரூபவாஹினி நிறுவனத்திற்குரியதும் ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தால் பாதுகாக்கப்பட வேண்டியதுமான ஆர்எப் கேபள் ஒன்றினது பகுதி அத்துமீறி வெட்டி அகற்றப்பட்டமை தொடர்பாக ஆரம்ப விசாரணை மேற்கொள்ளப்பட்டபோதும், ஏறக்குறைய 3½ அங்குல சுற்றளவுடைய செம்பிலான இக்கம்பி தொலைந்து போனதால் ஏற்பட்ட இழப்பைப் பொறுப்பானவர்களிடமிருந்து அறவிடுவதற்கு கணக்காய்வுத் தினமான 2018 செப்டெம்பர் 03 ஆந் திகதியளவிலும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 4.10 முறையாகச் சுவீகரிக்கப்படாத காணிகளில் / சொத்துக்களில் செயற்திட்டங்களை ஆரம்பித்தல்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) ஒலிபரப்புத் திணைக்களம் செயலாற்றியதும், தற்போது ஓிபரப்புக் கூட்டுத்தாபனத்தால் பயன்படுத்தப்படுவதுமான கொழும்பில் உள்ள 2.5036 ஹெக்டேயார் காணி 1949 தொடக்கம் பயன்படுத்தப்பட்டவாறிருந்தபோதும், இதுவரை நிறுவனம் சட்டபூர்வமாக அதனைச் சுவீகரிப்பதற்குத் தவறியிருந்தது.

(ஆ) பொருட் கொள்வனவு வழிகாட்டிக் கோவையின் 2.3.1 ஆம் பந்தியின் பிரகாரம், கட்டிடங்களை நிர்மாணிக்கும்போது பொருட் கொள்வனவு நிறுவனம் காணியைச் சுவீகரிக்கும் நடவடிக்கைகளை நிறைவேற்றியுள்ளதாகவும் செயற்திட்டம் தடையின்றி அமுலாகுவதற்குத் தேவையான ஏனைய சகல விடயங்களும் நிறைவேற்றியுள்ளதாகவும் உறுதி செய்யப்படுவது பொருட் கொள்வனவு உத்தியோகத்தர்களது பொறுப்பும் கடமையும் ஆகுமாயினும், பொறுப்பானவர்களிடமிருந்து விளக்கம் பெறப்படாது கூட்டுத்தாபனம் தனது உரித்தாகக் கொண்டிருந்த பழைய கட்டிடத்துடன் கூடிய 23 பர்ச்சஸ் வளமுடைய ''அனிவத்த பஹிரவ கந்த'' எனும் இடத்திலிருந்து 500 மீட்டர் தூரத்தில் உள்ள உயர்கல்வி அமைச்சிற்குச் சொந்தமான காணி ஒன்றில் கந்துரட்ட சேவைக்கென இருமாடிக் கட்டிடத்தை நிர்மாணிப்பதற்கு 2017 டிசெம்பர் 31 ஆந் திகதியளவில் ஒப்பந்தகாரர் ஒருவருக்கு ரூபா 1,579,442 வழங்கியிருந்தது.

(இ) முதலீட்டுச் சபையால் வழங்கப்பட்ட பயணஞ் செய்யும் நிலையில் உள்ள வாகனமொன்று 2010 ஆம் ஆண்டில் ரூபா 2,300,000 ஆக மீளப் பெறுமதியிடப்பட்டுக் கணக்கிலிடப்பட்டிருந்தது. எனினும்,அதன் உரித்தைச் சரிவர சுவீகரிப்பதற்கு 2018 செப்டெம்பர் 3 ஆந் திகதியளவிலும் கூட்டுத்தாபனம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

## 4.11 ஏனைய அரச நிறுவனங்களுக்கு வழங்கப்பட்ட நிறுவனத்தின் வளங்கள்

2003 யூன் 02 ஆந் திகதிய பீஈடி/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 9.4 ஆம் பந்தியின் பிரகாரம் அரச கூட்டுத்தாபன ஊழியர்கள் அமைச்சரவை அங்கீகாரமின்றி வேறு நிறுவனங்களுக்கு விடுவிக்கப்படலாகாது. எனினும், நிர்வாக (கிராமிய) உத்தியோகத்தர் ஒருவரும் முதலாம் தரத்தில் உள்ள அறிக்கை வழங்குனர் ஒருவரும் அமைச்சரவையின் அங்கீகாரமின்றி ஏனைய இரு அமைச்சுக்களுக்கு விடுவிக்கப்பட்டிருந்தனர்.

## 4.12 பதவியணி நிர்வாகம்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2006 செப்டெம்பர் 22 ஆந் திகதிய 30 ஆம் இலக்க முகாமைத்துவச் சேவைகள் திணைக்களச் சுற்றறிக்கையில் உள்ள ஏற்பாடுகளுடன் இணங்கி வருமாறு, புதிய ஆட்சேர்ப்பு மற்றும் பதவி உயர்வு விதிமுறைகள் கணக்காய்வுச் சந்தர்ப்பமான 2018 ஆகஸ்ட் மாதமளவிலும் அங்கீகரிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) சமர்ப்பிக்கப்பட்ட தகவல்களின் பிரகாரம், மீளாய்வாண்டின் டிசெம்பர் 31 இல் உள்ளவாறு கூட்டுத்தாபனத்தின் நிரந்தர பதவியணியினரது எண்ணிக்கை 803 ஆகும். அதில் 302 பேர் மிகையாக இருந்தோராகும்.

(இ) கூட்டுத்தாபனத்தின் 03 பிரதான நிறைவேற்றுதரப் பதவிகளான மேலதிகப் பணிப்பாளர் நாயகம், பிரதிப் பணிப்பாளர் நாயகம் (நிதி), பிரதிப் பணிப்பாளர் நாயகம் (பொறியியல்) என்பன 03 முதல் 09 ஆண்டுகளாக வெற்றிடமாக இருந்தன. அவ்வாறே, பிரதிப் பணிப்பாளர் நாயகம் (பொறியியல்), பணிப்பாளர், பொறியியல் (கூடம்), பொறியியல் அத்தியட்சகர் பொறியியலாளர் போன்ற பதவிகளில் 01 முதல் 04 ஆண்டுகளாக 08 வெற்றிடங்கள் நிலவின. இவ்வெற்றிடங்கள் நிரப்பப்படாமையால் பொறியியல் பிரிவின் கடமைகள் தரம் வாய்ந்தனவையாக நிறைவேற்றப்படாது போனமை மேலும் அவதானிக்கப்பட்டது.

(ஈ) மீளாய்வாண்டின்போது கூட்டுத்தாபனத்தின் அங்கீகரிக்கப்படாத 47 பதவிகளுக்கு 227 பேர் பதவிகளில் அமர்த்தப்பட்டிருந்தனர்.

(உ) இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபன ஆட்சேர்ப்பு நடைமுறையின் 06 ஆம் பந்தியின் பிரகாரம், உள்ளக விண்ணப்பதாரர் பொறியியலாளர் பதவிக்கு நியமனஞ் செய்யப்படும்போது கூட்டுத்தாபனத்தின் முதலாந்தர தொழில்நுட்ப உதவியாளர் தரத்தில் 05 ஆண்டுகால சேவையைப் பூர்த்தி செய்திருக்க வேண்டுமாயினும், 1985 ஆம் ஆண்டிலும் 2002 ஆம் ஆண்டிலும் முதலாந்தர தொழில்நுட்ப உதவியாளர் பதவியில் 05 ஆண்டுகால சேவையைப் பூர்த்தி செய்திராத 2 உத்தியோகத்தர்கள் பொறியியலாளர் பதவிக்கு நியமனஞ் செய்யப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது.

### 4.13 வர்த்தகச் சந்தைப் பிரிவு

இலங்கை விற்பனை ஆராய்ச்சிப் பணியகத்தின் (LMRB) அறிக்கையின் பிரகாரம் 29 ஒலிபரப்பு அலை வரிசைகளில் 2017 செப்தெம்பர் மாதமளவில் இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தால் பராமரிக்கப்படும் 08 பிரதான உள்ளூர் சிங்கள சேவைகளுள் சிங்கள ஜாதிக சேவை 10 ஆம் இடத்திலும் ஏனைய 07 சேவைகள் அதற்குக் குறைந்த இடத்திலும் இருந்தன. பிரதேச சேவைகளில் றுஹுனு சேவை 24 ஆம் இடத்தில் இருந்தது.

## 5. நிலைத்து நிற்கவல்ல அபிவிருத்தி

### 5.1 நிலைத்து நிற்கவல்ல அபிவிருத்தி நோக்கங்களை அடைதல்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2017 ஆகஸ்ட் 14 ஆந் திகதிய என்பீ/எஸ்பீ/எஸ்டிஜீ/17 ஆம் இலக்க தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சினது செயலாளரினால் வெளியிடப்பட்ட கடிதம் மற்றும் நிலைத்து நிற்கவல்ல அபிவிருத்தி தொடர்பான ஐக்கிய நாடுகளின் 2030 ஆம் ஆண்டு நிகழ்ச்சி நிரலின் பிரகாரம் சகல அரச நிறுவனங்களும் செயலாற்ற வேண்டுவதுடன், மீளாய்வாண்டு தொடர்பாக தமது பரப்பெல்லைக்குள் வரும் பணிகளை எவ்வாறு நிறைவேற்ற வேண்டுமென்பதைக் கூட்டுத்தாபனம் அறிந்திருக்கவில்லை.

(ஆ) மேற்கூறியவாறு 2030 நிகழ்ச்சி நிரல் தொடர்பாகக் கூட்டுத்தாபனம் அறிந்திராமையால் அப்பணிகள் தொடர்பான நிலைத்து நிற்கவல்ல அபிவிருத்தி நோக்கங்கள், இலக்குகள், அவ்விலக்கை எய்தும் வழிவகைகள், இலக்கை அளவிடுதல் போன்றவற்றுக்கான சுட்டுக்களை இனங்காண்பதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

## 6. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 6.1 பொருட் கொள்வனவும் ஒப்பந்தச் செயற்பாடுகளும்

#### 6.1.1 பொருட் கொள்வனவு

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) அரசாங்க மூலதனப் பங்களிப்புடன் நடைபெறும் பொருட் கொள்வனவுகளுக்கு மாத்திரமே வருடாந்த பொருட் கொள்வனவுத் திட்டம் தயாரிக்கப்பட்டிருந்ததுடன், மீண்டெழும் பங்களிப்புடைய மற்றும் கூட்டுத்தாபன நிதியத்தின் மூலம் நடைபெறும் பொருட் கொள்வனவுகளும் உள்ளடங்குமாறு குறைந்தது 03 ஆண்டுகளுக்கான பொருட் கொள்வனவுத் திட்டமேனும் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. இதற்கமைய, ஓராண்டிற்கு மேலாகத் தொடரக் கூடிய செயற்திட்டங்களுக்கான பொருட் கொள்வனவுகள் மற்றும் பொருட் கொள்வனவுக் குழுவால் அங்கீகரிக்கப்பட்டு இதுவரை குழுவின் சிபாரிசு அமுலாகாதிருக்கும் பொருட் கொள்வனவுகளும் எதுவித பகுப்பாய்வுக்கும் உட்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 2016, 2017 ஆம் ஆண்டுகளில் தலைமை அலுவலக தொடர்புக் கூடத்தை நவீனமயப்படுத்தல் மற்றும் FM அலைவரிசைக் கூடத்தை நவீனமயப்படுத்தல் என்பவற்றிற்கு முறையே ரூபா 80 மில்லியன் மற்றும் ரூபா 193.75 எனப் பொருட் கொள்வனவுகளுக்குத் திட்டமிடப்பட்டிருந்தது. எவ்வாறாயினும் 2017 ஆம் ஆண்டின் இறுதியளவில் முறையே ரூபா 43 மில்லியன் மற்றும் ரூபா 88.7 மில்லியன் பொருட் கொள்வனவுகள் மாத்திரமே நடைபெற்றதால் முறையே ரூபா 37 மில்லியன் மற்றும் ரூபா 105.05 மில்லியன் என்பவற்றிற்கான பொருட் கொள்வனவுகள் திட்டமிட்டபடி நடைபெறவில்லை.

(இ) வருடாந்தம் ஏறக்குறைய ரூபா 200 மில்லியனுக்கான கொள்வனவுகளைக் கூட்டுத்தாபனம் மேற்கொண்டபோதும், பொருட் கொள்வனவுக்கென வேறாக ஒரு பிரிவு இல்லாமையால் உள்ளகக் கட்டுப்பாடு நலிவடைவதற்குப் பெருமளவு காரணமாக அமைந்தது. அதற்கமைய, பொருட் கொள்வனவின்போது தவறு ஏற்படக்கூடிய சாத்தியத்தைக் குறைப்பதற்கான கொள்கை, நடைமுறை, விதிகள் மற்றும் தாபன வியூகம் போன்ற உள்ளகக் கட்டுப்பாட்டு விதிமுறைகள் அறிமுகஞ் செய்து வைக்கப்படாதிருந்தன.

## 6.2 ஆண்டறிக்கைகளை பாராளுமன்றத்தில் முன்வைத்தல்

2015 ஆம் ஆண்டிற்கான ஆண்டறிக்கை கணக்காய்வுச் சந்தர்ப்பமான 2018 ஆகஸ்ட் 31 ஆந் திகதியளவிலும் பாராளுமன்றத்தில் முன்வைக்கப்பட்டிருக்கவில்லை.

## 6.3 தீர்வு செய்யப்படாத கணக்காய்வுப் பந்திகள்

2016 ஆம் ஆண்டிற்கான கணக்காய்வு அறிக்கையின் தீர்வு செய்யப்படாத பந்திகள் பின்வருமாறு

(அ) புத்தூரில் அன்டனா கோபுரத்தை நிர்மாணிக்கும் நடவடிக்கைகள், நிர்மாணத்திற்கான நிதி மற்றும் தொழில்நுட்ப ஆற்றலினைக் கவனத்தில் கொள்ளாமல் பெறுகைகள் வழிகாட்டிகளிலிருந்து விலகி 2011 யூலை 16 ஆந் திகதி கைப்பணிகள் சபைக்கு கையளிக்கப்பட்டிருந்தது. நிர்மாண நடவடிக்கைகளை ஆரம்பிப்பதற்காக முற்பணமாக கைப்பணிகள் சபைக்கு ரூபா 9,126,933 தொகை செலுத்தப்பட்டிருந்ததுடன், நிர்மாண நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படாது ஒப்பந்தம் கைவிடப்பட்டிருந்தது. செலுத்திய முற்பணத் தொகையில் ரூபா 4,348,041 மாத்திரம் கூட்டுத்தாபனத்திற்கு மீள செலுத்தப்பட்டமையால், ரூபா 4,778,892 தொகையான நட்டம் ஏற்பட்டிருந்தது.

(ஆ) 1996 ஆம் ஆண்டின்போது 60 மீட்டர் மற்றும் 100 மீட்டர் உயரமான 2 அன்டனா கோபுரங்களை கொண்டு வருவதற்காக ரூபா 23,119,683 தொகை செலவிடப்பட்டிருந்ததுடன், கோபுரங்களைப் பொருத்துவதற்காக தனியார் நிறுவனமொன்றுக்கு முற்பணமாக ரூபா 2,568,000 தொகை செலுத்தப்பட்டிருந்தது. பொருத்தப்பட வேண்டிய இடங்கள் தீர்மானிக்கப்பட்டிராமையால், மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் கோபுரங்கள் பொருத்தப்பட்டிராததுடன், அந்த உபகரணங்கள் ஏக்கலை நிலப்பிரதேசத்தில் பாதுகாப்பற்ற முறையில் குவித்து வைக்கப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது.

(இ) கூட்டுத்தாபனத்தினால் ரூபா 860,000 செலுத்தி கொள்வனவு செய்யப்பட்டிருந்த இரு வீடுகளுக்குரிய (அநுராதபுரம் மற்றும் கண்டி) ஒப்படைப்பு சான்றிதழைப் பெற்று உரிய முறையில் உரித்தினை பெற்றுக்கொள்வதற்கு மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஈ) இலங்கை கணக்கீட்டு நியமம் 16 இன் 07 ஆம் பந்தியின் பிரகாரம், ஏதாவதொரு சொத்தின் மூலம் எதிர்கால நலன் நிறுவனத்தை வந்தடையுமாயின், அச்சொத்தினது கிரயம் விசுவாசமாகக் கணிப்பிடக் கூடியதாகவிருந்தால் அதனை ஒரு சொத்தாக இனங்காண முடியுமாயினும், ஊடக அமைச்சிலிருந்து பெறப்பட்ட ரூபா 2,200,000 காப்புறுதிப் பெறுமதியுடன் கூடிய 058-6222 ஆம் இலக்க மோட்டார் வாகனம் 2014 தொடக்கம் கூட்டுத்தாபனத்தால் பயன்படுத்தப்பட்டபோதும் அது நிலையான சொத்தாக இனங் காணப்பட்டுக் கணக்கிலிடப்பட்டிருக்கவில்லை.

(உ) பழுதடைந்து 10 ஆண்டுகளுக்கு மேலாக பயன்படுத்தப்படாது ஏகல ஒலிபரப்பு வளாகத்தில் தரித்து வைக்கப்பட்டிருக்கும் மஹாவலி அதிகாரசபையால் வழங்கப்பட்ட ஸ்ரீ 60-355 இலக்கமுடைய வாகனம் 2010 ஆம் ஆண்டில் ரூபா 150,000 பெறுமதியில் மீள மதிப்பிடப்பட்டுக் கணக்கிலிடப்பட்டிருந்தபோதும், இதுவரை அதன் உரித்தை தீர்வு செய்து அதனைக் கூட்டுத்தாபனம் சுவீகரிப்பதற்கு நடவடிக்கை எடுக்காமையால் அதனை கைதவிர்ப்புச் செய்ய முடியாத நிலைமையும் உருவாகியிருந்தது.

(ஊ) 1989 ஆம் ஆண்டில் யப்பானிய ரூபவாஹினி மற்றும் யப்பானிய ஒலிபரப்பு நிலையம் (NHK) என்பவற்றின் உதவியுடன் ஆரம்பிக்கப்பட்ட செயற்திட்டத்தின் முடிவில் ஒலிபரப்புக்கூடக் கட்டிடம் மற்றும் சகல இயந்திரங்கள் என்பன 1993 ஆம் ஆண்டில் ஒலிபரப்புக் கூட்டுத்தாபன தலைமை அலுவலகத்தில் ஒப்படைக்கப்பட்டிருந்தன. அக்காணியும் கட்டிடங்களும் 2011 யூலை 29 ஆந் திகதிய விலை மதிப்பீட்டு அறிக்கையின் பிரகாரம் ரூபா 960,000,000 ஆக மதிப்பீடு செய்யப்பட்டிருந்தபோதும், சொத்து எதுவுமே கணக்கிலிடப்பட்டிராததுடன், செயற்திட்டத்துடன் தொடர்புடைய கோவை எதுவுமே கணக்காய்விற்குச் சமர்பிக்கப்படவுமில்லை.

(எ) உடன்படிக்கைப் பிரகாரம், குத்தகை வாடகையைச் செலுத்தாமையால் கூட்டுத்தாபனத்திற்குரிய நுவரேலியா ''நிவஹன'' விடுமுறை விடுதியின் குத்தகையாளருக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்யப்பட்டு குத்தகையாளர் அங்கிருந்து வெளியேற்றப்பட்டிருந்தபோதும், 2005 முதல் 2014 பெப்ரவரி வரை உடன்படிக்கைப் பிரகாரம் அறவிடப்பட வேண்டிய குத்தகை வாடகையாகிய ரூபா 5,106,500 மற்றும் குத்தகையை பெற்றவரிடமிருந்து சொத்தினது உரித்தை மீண்டும் பெறுவதற்கு 2010 ஆம் ஆண்டு முதல் செலவாகிய வழக்குச் செலவினமாகிய ரூபா 2,151,206 ஐ அறவிடுவதற்குக் கணக்காய்வுச் சந்தர்ப்பமான 2018 ஆகஸ்ட் 31 வரை கூட்டுத்தாபனம் சட்டபூர்வ நடவடிக்கைகளை மேற்கொண்டிருக்கவில்லை.

(ஏ) அம்பேவல ஒலிபரப்புக் கூடத்தை நிர்மாணிப்பதற்கு 1984 ஆம் ஆண்டில் நுவரேலியா மற்றம் வெலிமடை பிரதேச செயலகங்களின் அதிகாரத்துக்குட்பட்ட ஏறக்குறைய 30 ஏக்கர் காணி அரசாங்கத்தால் ஒதுக்கப்பட்டிருந்தது. எனினும், குத்தகை உடன்படிக்கையின் மூலம் சட்டரீதியாக இக்காணியைச் சுவீகரிப்பதற்கு நடவடிக்கை எடுத்திராததுடன், 2017 டிசெம்பர் 31 வரை உத்தேச பணிக்கு பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை. இக்காணியில் நுவரேலியா பிரதேச செயலகத்திற்குரிய ஏறக்குறைய 06 ஏக்கர் காணிக்கான குத்தகை உடன்படிக்கை கைச்சாத்திடப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கையில் இக்காணியின் ஒரு பகுதியை ''விதுலங்கா'' எனும் தனியார் நிறுவனத்திற்கு வழங்குவதற்கு பிரதேச செயலாளர் நடவடிக்கை எடுத்திருந்தார். வெலிமடை பிரதேச செயலாளருக்குரிய ஏறக்குறைய 24 ஏக்கர் காணியின் குத்தகை உரித்தைப் பெறுவதற்கு கூட்டுத்தாபனம் தவறியிருந்தது. காணியில் உள்ள சுற்றுலா விடுதிகள் இரண்டை மாத்திரமே கூட்டுத்தாபனம் நடாத்தியவாறிருந்தது.

(ஐ) எப்பம் ஒலிபரப்புக் கூடத்தை நிர்மாணிப்பதற்கு 1990 ஆம் ஆண்டின்போது ரூபா 50,000 க்குக் கொள்வனவு செய்திருந்த 1.503 ஹெக்டேயார் கலபுவாவயில் உள்ள செழிப்பான காணி கணக்காய்வுத் தினமான 2018 செப்டெம்பர் 03 வரை உத்தேச பணிக்குப் பயன்படுத்தப்படாதிருந்தது. அதில் 19.77 பர்ச்சஸில் கோபுரம் ஒன்றை அமைத்து லங்கா பெல் நிறுவனம் 2011 ஆம் ஆண்டு முதல் இயங்கியவாறிருந்தது. மாதாந்தம் ரூபா 15,000 ஐ செலுத்துவதற்கு அந்நிறுவனம் உடன்பட்டிருந்தபோதும், இதுவரை சட்டபூர்வமாக குத்தகை உடன்படிக்கையில் ஈடுபடுவதற்கு இயலாது போனமையால் 2011 ஆம் ஆண்டு தொடக்கம் நிறுவனம் பெற வேண்டிய காணி வாடகை வருமானத்தை அறவிட முடியாதிருந்தது.

(ஒ) நுவரேலியா பிரதேச செயலாளருடன் ஏற்பட்ட உடன்படிக்கைப் பிரகாரம் குத்தகை உடன்படிக்கை மூலம் பெறப்பட்ட நுவரெலியா ''நிவஹன'' விடுமுறை விடுதியின் குத்தகைக் காலம் 2015 ஒக்டோபரில் முடிவடைந்திருந்தது. அத்தினம் முதலாக சொத்தின் உரித்து பிரதேச செயலாளரைச் சாருமாயினும் அதனைக் கருத்திற் கொள்ளாது 2015 யூன் 01 முதல் 03 ஆண்டுகளுக்கு மாதாந்தம் ரூபா 290,000 குத்தகை வாடகைக்கு விடுமுறை விடுதியை நடாத்துவதற்கான குத்தகை ஒருவருக்கு வழங்கப்பட்டிருந்தது. மீளாய்வாண்டின் டிசெம்பர் 31 இல் உள்ளவாறான குத்தகை வாடகை நிலுவை ரூபா 725,000 ஆகும். இவ்வாறு கூட்டுத்தாபனத்திற்கு உரித்தற்ற சொத்து ஒன்றை குத்தகைக்கு வழங்குவது சர்ச்சைக்குரிய விடயமாக அவதானிக்கப்பட்டது.

(ஓ) ஒலிபரப்புச் சேவையை தன்னிச்சையாக இயங்கச் செய்வதற்கு 2008 முதல் பல சந்தர்ப்பங்களில் ரூபா 3,212,113 கூட்டுத் தொகை செலவழிக்கப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், 2017 டிசெம்பர் மாதமளவிலும் அச்சேவை மூலம் பெறக்கூடிய வசதிகளைப் பெறுவதற்கு இயலுமானவாறு அம் மென் அணி 03 சேவைகளில் மாத்திரமே ஈடுபடுத்தப்பட்டிருந்தது. மென் அணியைப் பெறுதவற்கு பெருமளவு பணத்தைச் செலவழித்தபோதும், அநேக பணிகள் இதுவரை தன்னிச்சையாகச் செயற்படாமை அவதானிக்கப்பட்டது.

(ஔ) ஒலிபரப்புக் கூட்டுதுதாபனத்திற்குச் சொந்தமான 125 ஏக்கர் சீதுவ காணியில் ஒவ்வொன்றும் 10 பேர்ச்சஸ் உடைய 1027 துண்டுகள் ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் இணக்கமில்லாது 2000 - 2001 காலப்பகுதியின்போது கட்டானை பிரதேச செயலாளரினால் பொதுமக்களுக்கிடையே வழங்கப்பட்டிருந்தது. 2018 செப்டெம்பர் 3 ஆந் திகதிய கணக்காய்வுத் தினம் வரை காணியின் உரித்து கூட்டுத்தாபனத்திற்குரியதாகவிருந்தபோதும், இழப்பீட்டைப் பெறுவதற்கு போதியளவு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவில்லை.

(க) 2016 ஒக்டோபர் 19 முதல் 2016 ஒக்டோபர் 27 வரையான காலப்பகுதியில் பாதுகாப்புப் பிரிவின் பொறுப்பில் இருக்கையிலேயே மின் உற்பத்திப் பிரிவில் பயன்படுத்தப்பட்டவாறிருந்த ரூபா 425,000 பெறுமதியான கவர் லொகர் அளவை உபகரணம் தொலைந்திருந்ததுடன், பாதுகாப்புப் பிரிவினரின் வாக்குமூலத்திற்கமைய இந்த இயந்திரம் அப்பிரிவிலேயே தொலைந்து போயிருந்தமை உறுதியாகியிருந்தும் ஏற்பட்ட இழப்பைப் பொறுப்பான நபர்களிடமிருந்து கணக்காய்வுத் தினமான 2018 செப்டெம்பர் 05 ஆந் திகதியளவிலும் அறவிட்டிருக்கவில்லை.

## 7. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

கணக்காய்வின்போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுக் குறைபாடுகள் அவ்வவ்போது கூட்டுத்தாபனத் தலைவரின் கவனத்திற்கு கொண்டுவரப்பட்டன. பின்வரும் கட்டுப்பாட்டுத் துறைகளில் விசேட கவனம் கோரப்படுகின்றது.

| முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுத் துறை | அவதானிப்புகள் |
| --- | --- |
| (அ) சொத்து முகாமைத்துவம் | (i) கூட்டுத்தாபனத்தினால் கொள்வனவு செய்யப்பட்ட காணிகளது சட்ட ரீதியான உரித்தைப் பெற்றுக்கொள்ள நடவடிக்கை எடுக்காமை. |
| | (ii) கூட்டுத்தாபனத்திற்குரிய காணிகளைப் பாதுகாப்பதற்கு இயலாமை மற்றும் பெருமளவு காணி பயன்படுத்தப்படாமை. |
| | (iii) கூட்டுத்தாபனத்திற்குச் சொந்தமானபோதும் அது பயன்படுத்தப்படாமையால் வெளி நபர்கள் அவற்றை அத்துமீறிக் கைப்பற்றல் |

| | | | |
|---|---|---|---|
| | | (iv) | காணிகளும் கட்டிடங்களும் நேரடிச் சரி, பிழை பார்த்தலுக்கு உட்படுத்தப்படாமை. |
| | | (v) | பல நிலையான சொத்துக்களது கிரயம் மற்றும் அவை எங்குள்ளன என்பவற்றை வெவ்வேறாக இனங்காண முடியாமையால் பெருமளவு பழமை வாய்ந்த சொத்துக்கள் விற்பனை செய்யப்பட்டிருந்தும் அவற்றை புத்தகங்களிலிருந்து நீக்கியிராமை. |
| | | (vi) | வாகனங்கள் நேரடி சரி, பிழை பார்த்தலுக்கு உட்படுத்தப்படாமை. |
| (ஆ) | பெற வேண்டிய கணக்குகள் | (i) | 42 ஆண்டுகளுக்கு மேற்பட்ட பழமை வாய்ந்த கடன் மீதிகள் அறவிடப்படாதிருந்தமை. |
| | | (ii) | கடன்பட்டோர் கட்டுப்பாட்டுக் கணக்கிற்கும் பட்டோலைகளுக்குமிடையே உள்ள வேறுபாடுகளை இனங்கண்டு அவற்றை இணக்கஞ் செய்வதற்கான நடவடிக்கை எடுக்காமை. |
| (இ) | கையிருப்புக் கட்டுப்பாடு | (i) | கையிருப்புக் கணிப்பின்போது இனங்காணப்பட்ட கையிருப்புக் குறைகளையும் மிகைகளையும் பொருட் கணிப்புச் சபை அறிக்கையிடாமை. |
| | | (ii) | கையிருப்பு விடயங்களது தரவுகள் கணனி மயப்படுத்தப்படாமையால் கையிருப்பு அறிக்கைகளைப் பெறுவதில் அதிக காலம் ஏற்பட்டமை. |
| (ஈ) | கொடுப்பனவு செய்ய வேண்டிய கணக்குகள் | (i) | கடன்கொடுத்தோர் கட்டுப்பாட்டு கணக்கிற்கும் பட்டோலைகளுக்கும் இடையே உள்ள வேறுபாடுகளை இனங்கண்டு அவற்றை இணக்கம் செய்வதற்கு நடவடிக்கை எடுக்காமை. |
| | | (ii) | சேர்ந்து நின்ற செலவினம் 02 ஆண்டுகளுக்கும் 10 ஆண்டுகளுக்குமிடையே கொடுப்பனவு செய்யப்படாதிருத்தல் மற்றும் அச் சேர்ந்து நின்ற செலவினங்களுக்குப் பொறுப்புக் கூற வேண்டிய காலம் கடந்தோ அல்லது உள்ளவாறு பொறுப்பு இல்லாத செலவினம் இருப்பின் அவற்றைப் பகுப்பாய்வு செய்து தீர்வு செய்வதற்கோ நடவடிக்கை எடுக்கப்படாமை. |
| | | (iii) | வரிக்குரிய பொறுப்பு மற்றும் ஆண்டிற்குரிய உரிமை முறையாக இனங்காணப்பட்டு அவற்றைக் குறித்த |

| | | | |
|---|---|---|---|
| | | | தினத்தில் தீர்வு செய்வதற்கு நடவடிக்கை எடுக்காமை மற்றும் அந்நிலுவை வரிக்குத் தண்டப்பணம் செலுத்த வேண்டியேற்பட்டமை. |
| (உ) | பதவியணி நிர்வாகம் | (i) | ஆட்சேர்ப்பு நடைமுறை அங்கீகரிக்கப்படாமை |
| | | (ii) | அங்கீகரிக்கப்படாத பதவிகளுக்குத் தொடர்ந்து ஆட்சேர்க்கப்படுவதால் மிகை ஏற்பட்டமை. |
| | | (iii) | முறையாக நேர்முகப் பரீட்சை நடாத்தப்பட்டிருந்தும் பதவிக்குரிய தகைமைகள் அற்றோர் இரத்துச் செய்யப்பட்ட நேர்முகப் பரீட்சைகளின் பெயரால் ஆட்சேர்க்கப்பட்டமை. |
| (ஊ) | கணக்கீடு | (i) | கூட்டுத்தாபனத்தின் கணக்கீட்டு விதிமுறைகள் நாளதுவரையாக்கப்படாமை |
| | | (ii) | சொத்துக்கள், பொறுப்புகள், வருமானம், செலவினக் கணக்குகளில் கணக்கீட்டுக் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டமை. |
| | | (iii) | கணக்கீட்டின்போது பிரதான தோற்றுவாய் ஆவணமான நாட்குறிப்பு இலக்கங்கள், பெறுமதி, குறியீடு என்பவற்றைக் குறிப்பிடுகையில் குறைபாடுகள் நிலவியமை. |
| (எ) | பொருட் கொள்வனவு | (i) | விரிவான பொருட் கொள்வனவுத் திட்டம் தயாரிக்கப்படாமை. |
| | | (ii) | ஒலிபரப்புக்கூட நவீனமயப்படுத்தல் ஒப்பந்தங்களின்போது குறைபாடுகளுடன் அவை ஒப்படைக்கப்பட்டமை. |